FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8165131 OS/AC/2026/CC.II

1. District : மாவட்டம் Chennai PS: காவல்நிலையம் VdAC, Chennai City-II Year: ஆண்டு 2026 FIR No.: மு.த.அ. எண் Date: நாள் 01.07.2026 08.30 Hrs

2. (i) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act, 2018 Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 30.06.2026 Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 13.30 Hrs Time to : நேரம் வரை 13.50 Hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 30.06.2026 Time : நேரம் 17.30 Hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 30.06.2026 Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் o/o. Assistant Engineer (O&M), TNEB, Anna Nagar Central Office, Anna Nagar, Chennai. at about 15 KM. North
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் T.M. Tharun (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் P.T. Murali mohan
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1998 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Global Innovatives (g) Address : முகவரி No. 1525, T.S. Krishna Nagar, Mogappair, Chennai - 37.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Thiyagarajan, Commercial Inspector, o/o. Assistant Engineer (O&M), TNEB Anna Nagar Central Office, Anna Nagar Chennai.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு


—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheets are enclosed



13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed M.VISVAKHUMAR Rank INSPECTOR OF POLICE to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

1/7/26.

01.07.2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 01.07.2026

Name: பெயர் M.VISVAKHUMAR
Rank: நிலை INSPECTOR OF POLICE No. எண் .....

CC-II, V4AC, Ch.14.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது: சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு-2-ன் காவல் ஆய்வாளர் M.விஸ்வகுமார் ஆகிய நான் 30.06.2026-ந்தேதி மாலை 17.30 மணிக்கு அலுவலகத்தில் பணியிலிருந்தபோது சென்னை, முகப்பேர், T.S.கிருஷ்ணா நகரைச் சேர்ந்த திரு.T.M.தருண் என்பவர் அலுவலகம் வந்து கணினி மூலம் தட்டச்சு செய்து கொண்டு வந்து அளித்த எழுத்துமூலமான புகாரினை பெற்று அதன் பேரில் மறைமுக விசாரணை செய்து உயர் அதிகாரிகளுக்கு மேற்படி புகாரின் உண்மை தன்மையை தெரிவித்து, உயர் அதிகாரிகளின் உத்தரவின்படி இன்று 01.07.2026-ந் தேதி காலை 08.30 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். அவர் அளித்த எழுத்து மூலமான புகாரின் விவரம் பின்வருமாறு:- அனுப்புநர், T.M.தருண், எண்.1525, T.S.கிருஷ்ணா நகர்,முகப்பேர், சென்னை-37. பெறுநர், இன்ஸபெக்டர் அவர்கள், விஜிலென்ஸ் ஆபீஸ், ஆலந்தூர், சென்னை-16. அய்யா, நான் சென்னை-40, அண்ணா நகர் மேற்கு, 13வது மெயின் ரோடு, எண்-1493 என்ற விலாசத்தில் Global Innovatives என்ற பெயரில் அலுவலகம் வைத்து Solar Panel, Inverter, Battery விநியோகம் மற்றும் நிறுவுதல் ஆகிய பணிகளை செய்து வருகிறேன். சென்னை, அண்ணா நகர், சாந்தி காலனியை சேர்ந்த திரு.ரோஷன் கபூர், அவர் வீட்டில் சோலார் பேனல் அமைத்து தருமாறு என்னை கேட்டார். அவர் வீட்டை பார்வையிட்டதில் 4 KW மின் பழு தான் உபயோகத்தில் இருந்தது. சோலார் பேனல் அமைத்து 10 KW மின் பழுவாக அதிகபடுத்தி தருமாறு கேட்டார். திரு.ரோஷன் கபூர் அவர்களின் ஒப்புதலின் பேரில் அவருடைய பெயரில் 01.06.2026 அன்று 4 KW மின் பழுவில் இருந்து 10 KW மின் பழுவாக உயர்த்த ஆன்லைனில் விண்ணப்பித்து, நான் அதற்கான அரசு கட்டணமான ரூ.41,220/- செலுத்திவிட்டேன். இந்த பணி செய்து முடிப்பது சம்மந்தமாக 26.06.2026 ந் தேதி திரு.ரோசன் கபூருடன் அக்ரிமெண்ட் போடப்பட்டுள்ளது. எனது விண்ணப்பம் பற்றி எந்த தகவலும் இல்லாததால், 29.06.2026 அன்று அண்ணா நகர், TNEB அலுவலகம் சென்று AE அவர்களை பார்த்து எனது ஆன்லைன் விண்ணப்பம் பற்றி கேட்டேன். அப்போது அவர் Commercial Inspector திரு.தியாகராஜன் அவர்களை சென்று பார்க்குமாறு கூறினார். அலுவலகத்தில் இருந்த Commercial Inspector திரு.தியாகராஜன் என்பவரை பார்த்து விவரம் கூறினேன். அப்போது அவர் திரு.ரோஷன் கபூர் வீட்டிற்கு கூடுதல் மின் பளு வழங்க 1 கிலோ வாட்டுக்கு ரூ.1000/- வீதம் ரூ.6000/- எனக்கு கொடுக்க வேண்டும். ஆனால், நீங்க ரூ.5000/- மட்டும் கொடுங்க என்று கூறினார். மேலும் சோலார் நெட்மீட்டர் கொடுப்பதற்கு தனியாக ரூ.10,000/-ம் கொடுக்க வேண்டும் என்று கூறினார். நான்

இந்த தகவலை திரு.ரோசன் கபூர் அவர்களிடம் கேட்டு சொல்கிறேன் என்று வந்துவிட்டேன். திரு.ரோசன் கபூர் அவர்களிடம் திரு.தியாகராஜன் லஞ்சம் கேட்ட விவரத்தை கூறினேன். அதற்கு அவர், அக்ரிமெண்டில் உள்ள கண்டிசன் படி வெண்டார் தான் லோடு அதிகபடுத்தி சோலார் நெட் மீட்டர் வழங்க வேண்டும் அதனால் நீங்க தான் கம்ப்ளையன்ட் கொடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொன்னார். அதனால் நான் மீண்டும் 30.06.2026ந்தேதி மதியம் சுமார் 01.30 மணியளவில் மீண்டும் அண்ணா நகர், உதவி பொறியாளர் அலுவலகம் சென்று Commercial Inspector திரு.தியாகராஜன் அவர்களை நேரில் பார்த்தேன். அப்போது அலுவலகத்தில் நிறைய ஆட்கள் இருந்ததால், நான் போனில் பேசுகிறேன், நீங்கள் கிளம்புங்கள் என்று சொல்லி திரு.தியாகராஜன் என்னை அனுப்பிவிட்டார். நான் கிளம்பி அண்ணா நகர் டவர் பார்க் மெட்ரோ ஸ்டேசன் அருகில் வரும்போது மதியம் சுமார் 01.50 மணியளவில் CI திரு.தியாகராஜன் எனக்கு 9600481245 என்ற எண்ணிலிருந்து போன் செய்தார். நான் அவரிடம் போனில் பேசும்போது இன்று வேலை முடித்து கொடுத்துவிடுவீர்களா என்றும் நீண்ட நாட்கள் ஆகிவிட்டது என்று கேட்டபோது, CI திரு.தியாகராஜன் என்னுடைய சைட்டுக்கு வந்து ரீடிங் எடுத்துவிட்டதாக கூறினார். நான், நீங்க பணம் கேட்டிங்க, மிகவும் கஷ்டமாக உள்ளது என்று சொன்னேன். அதற்கு அவர் கமர்சியல் என்றால் மூன்று ருபாய் கேட்பேன், டொமெஸ்டிக் என்பதால் 1000 கேட்கிறேன். 6 கிலோ வாட்டுக்கு 6 ருபாய் கேட்பேன், நீங்க 5 ருபாய் கொடுங்கள் போதும் என்று சொன்னார். நான் இது 9 கிலோ வாட் வேலை என்பதால் எனக்கு சுத்தமா லாபம் இல்லை என்று சொன்னேன். அதற்கு அவர், சரி ஒரு ஆயிரம் கம்மி பண்ணிக்கோங்க, நான் 10 ருபாய் கேட்பதற்கு பதிலா 5 ருபாய் தான் கேட்டேன், 6 ருபாய் கூட கேட்கல, அந்த 5 ருபாயில ஒரு ருபாய் கம்மி பண்ணிட்டேன். அதையும் கம்மி பண்ணா, AE கிட்ட பிரச்சனை வரும், அவர் என்னை திட்டுவாரு, நான் சொன்ன உடனே AE நேத்தே கையெழுத்து போட்டுட்டாரு, ரீடிங் எடுத்துட்டேன், போன உடனே சாங்சன் கொடுப்பார். நான் உடனே கம்ப்யூட்டரில் மாற்றிவிடுவேன், நான் சொன்னா செய்கிறார். இந்த பணத்தை அவருகிட்ட கொடுத்தால் அதில் ஒரு ஆயிரம் ருபாய் எனக்கு கொடுப்பார் என கூறினார். நான் வேறுவழியில்லாததால் நாளைக்கு கொடுக்கவா என்று கேட்டதற்கு, அதெல்லாம் ஒன்றும் பிரச்சனை இல்லை, நாளைக்கு வந்து கொடுங்கள் என்று சொன்னார். இந்த வேலையை செய்து முடித்தால் எனக்கு கையில் ஒரு 10,000/-ம் நிற்பதே பெரிய விஷயம். அதனால் அண்ணா நகர், TNEB, Commercial Inspector திரு.தியாகராஜன் கேட்கும் லஞ்சப்பணம் ரூ.4,000/-த்தை கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. ஆகவே மின் பழுவை அதிகப்படுத்தி சோலார் நெட்மீட்டர் வழங்க என்னிடம் லஞ்சம் கேட்ட CI திரு.தியாகராஜன் மீது நடவடிக்கை எடுக்குமாறு புகார் அளிக்கிறேன். இப்படிக்கு Sd (XXX) Tharun.30.06.2026. இணைப்பு (1).

26.06.2026 அன்று ரோஷன் கபூருடன் போட்ட ஒப்பந்தம் - 3 Sheets. (2). விண்ணப்பத்தின் விவரம் - Ref no. 2000 91610626434 - 2 Sheets. (3). 30.06.2026 அன்று தியாகராஜன் என்னுடன் தொலைபேசியில் பேசிய ஆடியோ அடங்கிய Pen drive. Sir, Received a complaint on 30.06.2026 at 17.30 hrs. Sd (XXX) M.Visvakhumar, 30.06.2026, Inspector of Police, CC-II, V&AC, Chennai-16. Sir, after due verification and getting concurrence from Superior Officers concerned, a case was registered in Chennai, V&AC, Chennai City-II in Cr.No.05/AC/2026/CC-II, u/s 7 of Prevention of Corruption (Amendment) Act, 2018 on 01.07.2026 at 08.30 hrs. Sd (XXX). M.Visvakhumar, 01.07.2026, Inspector of Police, CC-II, V&AC, Chennai-16.

The original FIR along with written complaint submitted before the Hon'ble Principal Judge, City Civil and Sessions Court, Chennai and other copies submitted to the officers concerned.

M.Visvakhumar
01.07.2026
Insp, CC-II,
V&AC, Ch-16.